பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELANADU

மலர்: 19 ஆவணி 29 றமழான் 29 இதழ் 214
யாழ்ப்பாணம் புதன்கிழமை 14-9-77

# பொத்துவிலில் யு. என். பி. விடுதலைக்கூட்டணி வெற்றி

பொத்துவில், செவ்.

பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தலில் முதலாவது எம். பியாக ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த ஜனாப் எம். எம். ஏ. ஜலால்தீனும், இரண்டாவது எம். பியாக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. எம். ஸி. கனகரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாப் ஜலால்தீனுக்கு 6325 பெரும்பான்மை வாக்குகளும், திரு. கனகரத்தினத்திற்கு 1612 பெரும்பான்மை வாக்குகளும் கிடைத்துள்ளன.

தேர்தல் முடிவுகள்வருமாறு;
ஜனாப் எம். எம். ஏ ஜலால்தீன் (ஐ தே. க. 30,315).
திரு. எம். ஸி. கனகரத்தினம் (த. வி. கூ.) 23,090
ஜனாப் எம். எம். முஸ்தபா (ஸ்ரீ ல. சு. க) 22,378.
திரு. என். தர்மலிங்கம் (சுயேச்சை) 7614.
ஜனாப் செய்யது அகமது மௌலானா (சுயேச்சை) 2902
திரு. பி. எஸ். ஜனநாயக (சுயேச்சை) 1158.
ஜனாப் எஸ். எல். அப்துல் சதார் சுயேச்சை) 222

ஐ. தே. க. வேட்பாளருக்கு பெரும்பான்மையாக 6325 வாக்குகளும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளருக்கு 1612 பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன.

கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலுக்கு முன்பாக இத்தொகுதியின் சுயேச்சை வேட்பாளர் ஒருவர் திடீர் மரணமாகியதையடுத்து இத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

தேசிய அரசப் பேரவையில் தற்போது கட்சிகளின் நிலை வருமாறு:

| | |
|---|---|
| ஐ.தே.க. | 140 |
| த.வி.கூ. | 18 |
| ஸ்ரீ ல.சு.க. | 9 |
| இ.தொ.கா. | |
| (அரசியல் பிரிவு) | 1 |

(உ)

# முகமூடிக் கொள்ளையன் வெட்டிக் கொலை!

## 13 வயதுச் சிறுவனின் துணிகரச் செயல்!

### மற்றும் கொள்ளைக்காரர் தப்பியோட்டம்: சாவகச்சேரிப்பகுதியில் நள்ளிரவில்சம்பவம்

கொடிகாமம், செவ்வாய்

நள்ளிரவில், முகமூடி அணிந்து துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கச் சென்றவர்களில் ஒருவரை அவர்களை எதிர்த்துப் போராடிய 13 வயதுச் சிறுவன் குழைச் சத்தகத்தினால் வெட்டிவீழ்த்திய துணிகரச் சம்பவம் அல்லாரை பகுதியில் நேற்று நடந்துள்ளது.

முகமூடியணிந்த மற்றொரு கொள்ளைக்காரரரையும் அச்சிறுவன் பலமாகவெட்டிய போதும் அந்நபர் மற்றும் இரு கொள்ளையரின் உதவியுடன் ஓடித்தப்பி விட்டதாகக்கூறப்படுகிறது

குறிப்பிட்ட வீட்டில் அண்மையில் காணி ஒன்றை விற்றுப் பெற்ற ரொக்கப் பணம் ரூபா 25 ஆயிரமும், 10 ஆயிரம் ரூபா நகைகளும் இருப்பதை அறிந்தே கொள்ளையர்கள் அவ்வீட்டுக்குச் சென்றதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கொள்ளையனின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

**காக்கிஉடையில் வந்தனர்**

முகமூடிக் கொள்ளையர்கள் நீளக் கால்சட்டையும், காக்கி சேட்டும், தொப்பியும் அணிந்திருந்தார்கள் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

**மக்கள் படையெடுப்பு**

13 வயதுச் சிறுவனால் கொலையுண்டதாக கூறப்படும் முகமூடித் திருடனைப் பார்ப்பதற்கு அல்லாரைக்கு சுற்றுப் புறங்களிலிருந்து பெருந்திரளான ஆண்களும், பெண்களும் படையெடுத்தனர். சாவகச்சேரிப் பொலிசார் நேற்றுக் காலை ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைக்கான ஒழுங்குகளை செய்தனர்.

**இரத்த வெள்ளத்தில்**

கொலையுண்டநபர் இரத்த வெள்ளத்தில் முகமூடி அணிந்தபடி கிடக்கக்காணப்பட்டார். 40 வயது மதிக்கக் கூடிய அந்நபர் பொலிசார் முகமூடியை அகற்றிய பின்பும் அடையாளம் காணப்படவில்லை.

**கண்ணில் வெட்டு**

முகமூடி அணிந்திருந்த இரு கண்களும் பலமாகத்தாக்கப் பட்டதுடன்! குதிக்காலும்

(6-ம் பக்கம் பார்க்க)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 16-ம் திகதி மட்டுநகரில் நடைபெற இருந்த அரசாங்க தமிழ் தட்டெழுத்தாளர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் பின் போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# வன்செயலுக்கு முற்றுப்புள்ளி அவசியம்

## பொலிஸ் அதிபர் சுந்தர் கருத்து



யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சமீப காலமாக நடைபெற்றுவரும் கொள்ளை, வழிப்பறி போன்ற வன்செயல்களைத் [illegible] கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய நிலையேற்பட்டுள்ளதாகப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

குற்றச் செயல்களில் யார் ஈடுபட்டாலும் அவர்களைக்

(6-ம் பக்கம் பார்க்க)

### பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள்

# உடமைகளை மீட்கபஸ்களில் அனுராதபுரம் சென்றனர்

வவுனியா: வன்னுரர்பண்ணை, புதன்

அனுராதபுரம் பகுதியிலிருந்து கலவரத்தில் வெளியேறிய அரசாங்க ஊழியர்களும் சில பொதுமக்களும் தமது உடைமைகளை மீட்டுக்கொள்வதற்காகவும் பாதுகாக்கப்பட்டுள்ள உடைமைகளில் தமது பொருட்களை அடையாளம் கண்டுகொள்வதற்காகவும் நேற்று மூன்று விசேஷ பஸ்களில் அனுராதபுரத்துக்குப் புறப்பட்டார்கள்.

பொலிஸ்பாதுகாப்புடன் இவர்கள் அனுப்பப்பட்டனர்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ. எல். விஜயபாலாஇதற்கான ஏற்பாட்டை செய்துள்ளார். (அ)

# கலவரத்தினால் வடபகுதி புற்று நோயாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதிப் புற்றுநோயாளர் சிகிச்சை பெறுவதற்கு மகாரகமை ஆஸ்பத்திரிக்குச் செல்லமுடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

மகாரகமை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் நோயாளிகளில் பலரும் ஊழியர்களும் அண்மையில் நடந்த கலவரத்தினால் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்

ஆஸ்பத்திரியில் முழுக்க முழுக்கத் தமிழ் தெரியாத ஊழியர்கள் இருப்பதாலும் கலவரத்தினால் எழுந்த நிலை காரணமாகவும் மீண்டும் சிகிச்சைக்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாக நோயாளர் ஒருவர் தெரிவித்தார்.

சிகிச்சை பெறுவதற்காக மகாரகமையில் வாடகை வீடொன்றில் 20 நாட்கள் தங்கியிருந்ததாகவும் கலவரத்தின் காரணமாகத் தாமும், மற்றும் தமிழ் நோயாளிகள் பலரும் கடந்த மாதம் 25-ந் திகதி யாழ்ப்பாணம் வந்து விட்டதாகவும் அவர் கூறினார்.

இதேசமயம் உடனடியாக மகாரகமைக்குச் சென்று சிகிச்சை பெறுவிடில் நோய் முற்றிவிடும் என டாக்டர் ஒருவர் அவருக்கு எச்சரிக்கை செய்துள்ளார். (க-அ)

# யாழ். இந்து 19-ம் - திகதிதான் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உள்ள அகதிகள் வேறு இடத்திற்கு இன்னும் மாற்றப்படாததினால் இன்று திறக்கப்படவிருந்த கல்லூரி இம்மாதம் 19 ம் தேதி திறக்கப்படும் எனத் தெரியவருகிறது.

இதே போன்று அகதிகள் தங்கியிருக்கும் வேறு சில கல்லூரிகளும் இம்மாதம் 19-ம் தேதியே திறக்கப்படும் எனத் தெரியவருகிறது. (கி-அ)

# வரி ஏமாற்றுக்காரரிடம் 1 வருடத்தில் 10 லட்சம் வசூல்

கொழும்பு, செவ்வாய்

வரி செலுத்தாமல் ஏமாற்றியவர்களிடமிருந்து கடந்த ஒரு வருட காலத்தில் வரி நீதிமன்றம் 7 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவை அறவிட்டுள்ளது.

இக்காலப் பகுதியில் விசேட வரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட 5 ஆயிரம் வரி ஏய்ப்பாளரிடமிருந்து ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபா அபராதமாகவும் பெறப்பட்டுள்ளது

வரி ஏய்ப்புத் தொடர்பாக மாதாந்தம் 1,500 வழக்குகள் இவ்விசேட வரி நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படுகின்றன.

வரி ஏமாற்றுக்காரர்களைக் கண்டுபிடிப்பதற்கு விசேட பொலிஸ் பிரிவொன்றும் கொழும்பில் இயங்கிவருகின்றது. (இ)

# கொள்ளை சந்தேக நபர்கள் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம், புதன்

நேற்று முன்தினம் இடம்பெற்ற அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கொள்ளை

(6-ம் பக்கம் பார்க்க)

# வடக்கில் பஸ்பிரயாணிகள் நெருக்கடி:

# 20,000 பேர் அதிகரிப்பு

## பிரயாணிகள் மணிக்கணக்கில் தவங்கிடக்கின்றனர்

யாழ்ப்பாணம், புதன் வடபகுதியில் கடந்த சில வாரங்களாக இ. போ. சபையினுல் பிரயாணிகளின் தேவையைப் பூர்த்திசெய்யமுடியாத நிலை ஏறபட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து தென்பகுதியிலிருந்து சுமார் பத்தாயிரம் அரசாங்க ஊழியர்களும், அவர்களது குடும்பங்களும் வடக்கே வந்துள்ளனர் இவர்கள் தினமும் தங்கள் இலாகாக்களில் சென்றுகையெழுத்திட்டு வருகின்றனர். இதனுல் வடக்கில் கடந்த மூன்று வாரங்களாகப் பத்தாயிரம் பிரயாணிகள் அதிகரித்துள்ளனர். ஆனுல் இதேசமயம் பஸ்கள் அதிகரிக்கப்படவில்லை இதனுல் வழக்கமாகக் கந்தோர்களுக்கும், ஆஸ்பத்திரிக்கும் செல்வோரும், மாணவர்களும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு பாதையிலும், சுமார் இரண்டு மணி நேரம், பிரயாணிகள் பஸ்ஸிற்குத் தவம் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### நல்லை முருகன் அடியார்கள் பாதிப்பு

நல்லூர் வருடாந்த உற்சவத்தையொட்டிப் பிரயாணிகள் தொகை கடந்த சில தினங்களாக மேலும் அதிகரித்துள்ளது. இ. போ. ச. நல்லூர் உற்சவத்தையொட்டி மேலதிக சேவைகளை ஒழுங்கு செய்திருந்தபோதிலும் பிரயாணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

நல்லூர் தேர், தீர்த்தம் ஆகிய இரு தினங்களும் பல்வேறு பாதைகளிலும் ஏராளமான பக்தர்கள் பல மணி நேரமாக பஸ்ஸிற்காகக் காத்துநின்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

இவ்வருடம் நல்லூர் தீர்த்தோற்சவம் காலையில் நடந்த போதிலும் பஸ் தட்டுப்பாடு காரணமாகப் பல பக்தர்கள் வழக்கமாகத் தீர்த்தோற்சவம் நடக்கும் நேரத்திற்குத் தான் கோவில் வந்தடைந்தனர்.

பஸ்ஸில் நெருக்கடி காரணமாகச் சிறுவர்கள், வயோதிபர் தாய்மார்கள், மணிக்கணக்கில், நெரிசலுக்கிடையில் நின்றுகொண்டு பிரயாணம் செய்யவேண்டியநிலைமை ஏற்பட்டது.

பஸ்ஸின் உதிரிப்பாகங்கள் தட்டுப்பாட்டினுல், சில பஸ்கள் பாதிவழியில் 'பிறேக் டவுணுகி' விடுவதால், பிரயாணிகள் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டியிருக்கிறது. அடுத்தடுத்துவரும் பஸ்களும் நிரம்பி வழிந்துவருவதால், அப்பிரயாணிகள் சொல்லமுடியாத கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

சில இரவு சேவைகள் ரத்துச் செய்யப்பட்டதனுலும் பிரயாணிகள் பாதிப்படைந்துள்ளனர்.

### கலவரத்தினுல் பாதிப்பு

ஒவ்வொரு மாதமும் பஸ் உதிரிப்பாகங்கள், கொழும்பிலிருந்து கொண்டுவரப்படுவதாகவும், கலவரம் காரணமாக கடந்த மாதம் உதிரிப் பாகங்கள் கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இதனுல் டயர், பல்ப், கட்அவுட், மோட்டார் ஆகியவை தட்டுப்பாட்டினுல் சில பஸ்கள் சேவையிலீடுபட முடியாத நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த இரு தினங்களும், யாழ்ப்பாணம பஸ் நிலையம் ஜனசமுத்திரமாகக் காட்சியளித்தது நல்லூர் உற்சவத்திற்குவந்த பக்தர்கள், பஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். இவர்களின் தேவையைப்பூர்த்தி செய்ய முடியாமல், இ.போ.ச உத்தியோகத்தர்கள் திணறித்திண்டாடினுர்கள். கச்சேரி, கொழும்புத்துறை போன்ற குறுகிய சேவையில் ஈடுபட்ட பஸ்கள், திசைதிருப்பிவிடப் பட்டன.

ஒரு பஸ்ஸில் பிரயாணிகள், கியூவை முறித்துக்கொண்டு இரு வாசல்களினுலும் உள்ளே ஏறி இடம் பிடித்தபோது தாய்மார்களும், சிறுவர்களும் நெரிசலில் சிக்கித் தவித்தனர். ஒரு பஸ், கண்டக்டர் இன்றியே புறப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டது.

கொடிகாமம் செல்லும் பஸ் ஒன்று புறப்படும் சமயம், வாசலில் நின்ற இளம்பெண் ஒருவர் பிரயாணிகளின் நெரிசலால், வெளியில் தூக்கி எறியப்பட்டுக் காலில் காயம் ஏற்பட்டது. பின் அப்பெண்ணை ஏற்றுமலேயே பஸ் சென்றுவிட்டது. பஸ்நிலையம் எங்கும் பிரயாணிகள் ஆட்சியாகவே காணப்பட்டது.

கலவரத்தின் காரணமாக வடக்கே வந்துள்ள சுமார் 20,000 பேர் தினமும் கச்சேரிக்கும், பொலிஸ்நிலையத்திற்கும், தபால்கந்தோருக்கும், மார்க்கட்டுக்கும் செல்வதால், பஸ் நெருக்கடி மேலும் அதிகரித்துள்ளது. (அ-s)

---


பாதிக்கப்பட்ட தமிழ் பொறியியலாளர் கூட்டம்

இடம்: ஹோட்டல் பரடைஸ் மேல்மாடி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: முற்பகல் 9-30 மணிக்கு 15-9-77 வியாழக்கிழமை

— செயற்குழுப் பிரதிநிதி

7085


## திருத்தம்

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

(1) இராமலிங்கம் கந்தையா (காலஞ்சென்றவர்)
(2) கந்தையா கைம்பெண் நகுலாம்பிகை

சண்டிலிப்பாய்.

வழ: இல. ஈடு/13819

எதிராக வழக்காளி

(1) ஆசிர்வாதம் அருள்தாசனும்
(2) பெண்-மேரி சிசிலியா - இருவரும்

107/2 பிச்ரோட், யாழ்ப்பாணம்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/13819ம் இலக்க வழக்கில் எனக்குக் கொடுபட்ட கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1977ம் வருடம் செப்ரெம்பர் மாதம் 30ம்- திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னுல்பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 7880/-ம் 7-5-1973 தொடக்கம் 6-2-75 வரைக்கும் ரூபா 4000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுசெலவு ரூபா 577/15 சதமும் இதில் ரூபா 500 கழிக்கப்படும்.

#### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூரிறை 'ஆவுடையான்காடு' நிலப்பரப்பு ஒன்று (நில பர. 1) கல்வீடும் வான் பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு கபிரிபேல் ஞானப்பிரகாசத்துக்கும் பெண் அன்ஸ்தி மேரிசுவிற்கு முரியவாதனம், மேற்கு சவரிமுத்து செல்லப்பாவின் ஆதனம், தெற்கு றப்பியேல் சயிமனுக்கும் கிறம்மாவுக்கும் உரிய ஆதனம்.

க. சரவணமுத்து
கொம்மிஷனர் விலைமதிப்பாளர்

38/1 சோமசுந்தரம் அவெனியூ
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 20-8-77

7033

---

## கள்ளுத் தவறணையை இடமாற்றக் கோரிக்கை

பண்டத்தரிப்பு, செல் சண்டிலிப்பாய் வலி. தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள கள்ளுத்தவறணையை அங்கிருந்து வேறு இடத்திற்கு அகற்றித் தருமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்திற்கு வருபவர்களில் சிலர் இங்குள்ள கள்ளுத்தவறணையில் மது அருந்திவிட்டுவந்து அமைதியைக் கெடுத்துவருவதாகவும் இதனுல் இங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

## ஒறுத்தல் மூலம் அகதிகளுக்கு ரூ. 1000 உதவி

யாழ்ப்பாணம், புதன் சாவகச்சேரி கிறிஸ்தவ திருச்சபையினர் சபைப் போதகர் வண. கே. எஸ். ஜெயசிங்கம் செய்துகொண்ட ஒழுங்கின்படி கடந்த மாதம் 28-ந் திகதி முதல் இம்மாதம் 4-ந் திகதி வரையுமுள்ள ஒரு வார காலத்தையும் ஒறுத்தல் வாரமாக அநுட்டித்ததன் பயனுகச் சேமிக்கப்பட்டுத் திரட்டிய ஆயிரம் ரூபாவை அகதிகள் புனர்வாழ்வு நிதிச் சபைத் தலைவரிடம் ஒப்படைத்துள்ளனர். (கா-அ

---

இ. பாலசுப்பிரமணியம்,
சட்டத்தரணி,
52, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

1973-ம் ஆண்டு 44-ம் இலக்க நீதி நிருவாகச் சட்டம் 283-ம் பிரிவின் கீழ்

### இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்;

கொக்குவில், தாவடி தெற்கு என்னுமிடத்திலிருந்து காலஞ்சென்ற சிவக்கொழுந்து இராசையா துரைராசா பெண் இராஜேஸ்வரி என்பவரின் ஆதனங்களும் மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்டவை

காலஞ்சென்றவர்

வலயம்:- யாழ்ப்பாணம்.
இல: 382

கொக்குவில், தாவடி தெற்கு என்னுமிடத்தில் வசிக்கும்

(பராயமற்ற)
1. துரைராசா ரஜனி
,, 2. துரைராசா ரஜிதா
,, 3. துரைராசா வரதன்

1-ம், 2-ம், 3-ம் பராயமற்ற பிரதிவாதிகள் தமது பாதுகாவலர்.

4. கோண்டாவில், கோண்டாவில் கிழக்கு என்னுமிடத்தில் வசிக்கும் சிவக்கொழுந்து இராசையா மகாதேவா மூலம் தோன்றுகிருர்கள்.

5. கொக்குவில் தாவடி வடக்கு. பிள்ளையார் கோவிலடியில் வசிக்கும் முத்துக்குமாரு சிவரத்தினம் கைம்பெண் அன்னப்பிள்ளை.

பிரதிவாதிகள்

6 - 7 - 77 திகதி யைக் கொண்ட 281-ம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் உறுதிக் கூறுகள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியடைந்ததன் பேரில் யாழ்ப்பாண நீதி பரிபாலன தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகியநான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பேரில்

(அ) 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பதாக எவராவது ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச் சென்ற மரண சாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும மற்றும் பெறுமதிகளுக்கும் நிருவாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்கு மேற்சொல்லப்பட்ட விண்ணப்பகாரரே காலஞ்சென்றவரின் கணவன் என்ற வகையில் உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு நிருவாகத்தத்துவப் பத்திரம் வழங்கப்படுகிறதென்றும்

(ஆ) மேலும் இம்மரணச் சொத்து நடவடிக்கை சார்பாக மேலே சொல்லப்பட்ட 4-ம் பிரதிவாதியை பராயமற்றவர்களாகிய 1-ம், 2-ம், 3ம்பிரதிவாதிகளுக்குப்பாதுகாவலராகவும் நியமிக்கப்படுகிறதென்றும் இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்:
கா. கணபதிப்பிள்ளை

தத்துவப் பத்திர அதிகாரி
1977-ம் ஆண்டு யூலை மாதம் 6-ம் திகதி.

7082

---


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரிஜினல் திண்டுக்கல் பெரிய இரும்புப்பெட்டி அடைவு கடைக்கு ஏற்றது. நேரில் பார்வையிடவும். 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7081

சோடா தயாரிப்பதற்கான இயந்திரங்கள், உபகரணங்கள் விற்பனைக்குண்டு. சோடா அடைக்கும் இயந்திரம் (English) கூப்பர் இயந்திரம் H. P. 18, தண்ணீர் பம்புகள், பெலிட்டுகள், அலுமேனிய இலேட் தாங்கிகள் (Tank) பில்டர், மாபிள் சாடிகள். தொடர்புகொள்ளவும்: நம். 95, சிவன்கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 7086

### தேவை

வார்ப்புவேலை, லேத்வேலை, கம்மாலைவேலை, வெல்டிங் வேலை, பிற்றிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில்வரவும் ராதா மெஷின் கம்பனி, 95ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 7062

### காணவில்லை

சரசாலையைச் சேர்ந்த கனகரத்தினம் தேவநாதனை (12 வயது) 9மாதமாகக் காணவில்லை. இடது கையிலும், நாக்கிலும் மச்சம் உண்டு. பொதுநிறம். பெற்றோர் கவலையடைந்துள்ளனர். தகவல் தெரிவிப்போருக்கு சன்மானம் வழங்கப்படும். க. ஆறுமுகநாதன் சரசாலை தெற்கு, சாவகச்சேரி. 7083


---

## கைதடியில் இன்று

யாழ்ப்பாணம், புதன் கைதடி சைவஅநாதை இல்லத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நடேசப் பெருமான் சிவகாமி அம்மையின் மணவாளக் கோல அபிஷேகம இன்று நடைபெறுகிறது

பிரம்மஸ்ரீ அ. சந்திரசேகரக் குருக்கள் தலைமையில் பல சைவ அறிஞர்களின் விசேஷ சொற்பொழிவுகளும் மாகேசுரபூசையும் நடைபெறும். (சா-அ)

...

## ''ஆசாரசீலர்களாக இருக்கவேண்டும்''

யாழ்ப்பாணம, புதன் ''கோவில்களில் புராணங்களை விரிவுரை செய்பவர்கள் சைவ ஆசாரசீலர்களாகவும் தாம் சொல்பவற்றை மக்கள் மனதில் நன்கு பதிய வைக்கும்படி சொல்லும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவும் அமையவேண்டும். இன்று இங்கு கௌரவிக்கப்படும் இரு அறிஞர்களும் எமது ஆதீனத்திலும் சொற்பெருக்காற்றி நல்ல தொடர்பு கொண்டவர்கள்''

சங்கத்தானை மீனாட்சியம்பாள் கோவில் பெரியபுராணப் பூர்த்திவிழாவில் உரையாற்றுகையில் நல்லை திருஞானசம்பந்த ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதபரமாசாரிய சுவாமிகள் இவ்வாறு கூறினுர்.

24 மாதங்களாக பெரிய புராண விரிவுரை நடத்திய சைவப்புலவர் திரு கு வி.மகாலிங்கத்தின் சேவையைப் பாராட்டி பொன்னுடையை சுவாமிகள் அவருக்குப் போர்த்தி ''பௌராணி வித்தகர்'' என்ற பட்டத்தையும் வழங்கினுர். பின்னர் ஆசிரியை பண்டிதை ஸ்ரீமதி சிவசம்பு உமையம்மைக்கு ''அருள்மொழியரசி'' என்ற பட்டத்தை சுவாமிகள் வழங்கினுர்.

(சா-உ)



திமு. கழகம்

# உலகத் தமிழர்இதயங்களில் நிறைந்திருக்கும் இயக்கம்

## கருணாநிதி பெருமிதம்

சென்னை, செப். 13

தமிழகத்தில் உள்ள நான்கு கோடிக்கு மேற்பட்ட மக்களால் மாத்திரமல்ல, உலகெங்கும் பரந்து வாழ்கின்ற தமிழ்ச் சமுதாய மக்கள். அவர்கள் இலங்கையில் வாழ்ந்தாலுஞ்சரி, சிங்கப்பூரில் வாழ்ந்தாலுஞ்சரி, பர்மாவில் வாழ்ந்தாலுஞ்சரி, இலண்டனில் வாழ்ந்தாலும்சரி, அமெரிக்காவில் சிக்காக்கோவில், நியுயோக்கில் தென்னாபிரிக்காவின் பிஜித்தீவிலோ எங்கு வாழ்ந்தாலும் அந்தத் தமிழர்களுடைய உள்ளங்களிலெல்லாம் இன்று நீக்கமற நிறைந்திருக்கின்ற தமிழ்ப் பெரும் இயக்கம் தி. மு. கழகத்தைத்தவிர வேறொன்றல்ல'' என்று சேலத்தில் நடைபெற்ற தி. மு. கழகக் கூட்டத்தில் கலைஞர் மு. கருணாநிதிபேசுகையில் கூறினார்.

### இலங்கைத் தமிழர் இன்னல்

அவர் தொடர்ந்து பேசுகையில் 'இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களுக்கு இன்னல் வந்த நேரத்தில் தம்முடைய தசையெல்லாம் ஆடியது; குருதி கொப்பளித்தது இதயம் துடித்தது நரம்புகள் நம்மையறியாமல் புடைத்துக்கொண்டன; மயிர்க்கால்கள் எல்லாம்சிலிர்த்தன; என்ன காரணம்? இலங்கையில் இருக்கின்ற தமிழர்களுக்கு அங்கே வாழ்கின்ற சிங்களஇன வாதிகளால் இன்னல் விளைவிக்கப்பட்டு தமிழ்த் தாய்மார்களின் மானம் பறிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டு, தமிழர்களுடைய செல்வம், சீர்சிறப்பு இவைகள் எல்லாம் இனவாதிகளால் வேட்டையாடப்படுகின்றசூழ்நிலை உருவாகி, அங்கேயிருந்த தமிழர்கள் எல்லாம் வளம் இழந்தவர்களாக, நாடிழந்தவர்களாக, அகதிகளாக அனாதைகளாக விரட்டப்பட்டார்கள்.

### 1961-ல்

இந்நேரத்தில், இந்நிலையை உணர்ந்து தமிழகத்தில் தி.மு. கழகம் ஒன்றுதான் அண்ணா வழியில் 1961-ம் ஆண்டுஇலங்கையில் கொடுமை ஏற்பட்டபோது எந்த அண்ணன் இங்கு அணிதிரட்டினாரோ, அந்த அண்ணன் உயிரோடு இல்லை. சிலையாக நிற்கின்றார். அந்தச் சிலையடியிலிருந்து இலட்சக்கணக்காக தமிழ் இனமக்கள் பேரணியாகத் திரண்டு இலங்கைத் துணை அமைச்சரிடம் முறையீட்டை வைத்த காட்சியை மறக்க முடியாது.

இதைப்போல இலண்டன் மாநகரில் தமிழர்கள் வெள்ளையர்களால் மானபங்கப்படுத்தப்பட்டபோதும், பர்மாத் தமிழ்அகதிகளை வரவேற்கின்ற தன்மையிலும் உலகத் தமிழ் இனமக்களிடையே பாதுகாப்பு காவல் அரணாக தி. மு. கழகம் விளங்கிக்கொண்டிருக்கின்றது'' என்றார். (கெ-உ)

## 1½ லட்சம்உல்லாசப் பயணிகள் வருவர்

கொழும்பு, செவ்வாய்

இவ்வாண்டு ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான உல்லாசப் பயணிகள் இலங்கை வருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகவலை உல்லாசப்பயணத்துறைதலைவர் வெளியிட்டார். (உ)

## "உடல் ஊனமுற்றோருக்கு தொழிற்சாலைகளில் முதலிடம்"

சென்னை, செப். 13

'உடல் ஊனமுள்ளவர்களுக்குத் தொழில் அதிபர்கள் தத்தம் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புக்கு முதலிடம் அளிக்க வேண்டும்' என்று தமிழ்நாடு அமைச்சர் குமாரி பி. டி. சரஸ்வதி கூறினார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இக்கருத்தை வெளியிட்டார். (உ)

ஜெனிவா மகாநாட்டில்

## பலஸ்தீனியர் பங்கு: யு. எஸ். அறிக்கை

வாஷிங்டன், செப். 13

மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பான ஜெனிவா சமாதான மகாநாடு வெற்றி பெற பலஸ்தீனியர்களின் பிரதிநிதித்துவம் முக்கியமானது என்று அமெரிக்கா வற்புறுத்தியுள்ளது.

இதுவிடயத்தில் இஸ்ரேலை பலஸ்தீனியர்கள் அங்கீகரிக்க வேண்டுமென்று அமெரிக்க வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பிரச்னையில் பலஸ்தீனியர்களின் பங்கு குறித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள உறுதியான கருத்து இதுவாகும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

## நெசவாளர் துயர்துடைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்

### தமிழக முதல்வர் சொல்கிறார்

சென்னை, செப். 13

"தமிழ்நாட்டில் உள்ள 35 லட்சம் நெசவாளர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்குரிய நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடவேண்டும்'' என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறியுள்ளார்.

"நெசவாளர் துயர் துடைப்பதில் அரசாங்கம் தன் பங்கை ஆற்றும்'' என்றும் முதலமைச்சர் சொன்னார்.

"அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத் தேர்தல் வேளையில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறாது'' என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

## நாஞ்சில்மனோகரன் கண்தானம் செய்வார்

சென்னை, செப். 13

தமிழ்நாடு நிதிஅமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் தமது கண்களைத் தாம் இறந்த பின்னர் தானமாக வழங்குவதற்கு விரும்பியுள்ளார்.

சென்னை சாயி சேவா சங்கத்தினர் திரு. மனோகரனைச் சந்தித்தபோது அவர் தமது விருப்பத்தைத் தெரிவித்தார்.

## தேசாய்-இந்திரா சந்திப்பு

புதுடில்லி, செப். 13

பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயை முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பு திரு. தேசாயின் வாசஸ்தலத்தில் கடந்தஞாயிற்றுக்கிழமை நடைபெற்றதாகவும் உரையாடல் சுமார் இருபது நிமிடநேரம்வரை நீடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பு திருமதி காந்தியின் விருப்பத்தின்பேரிலேயே இடம்பெற்றதாம்.

திரு. தேசாய் பிரதமராகப் பதவியேற்றுக்கொண்டபின் திருமதி காந்தியுடன் நடைபெற்ற மூன்றாவது சந்திப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

## "நேபாள - இந்திய நல்லுறவுவளரும்"

### புதிய நேபாள பிரதமர்

காட்மாண்ட், செப். 13

"பாரதத்துடன் நேபாளம் தொடர்ந்தும் நல்லுறவுகளை வளர்த்துக்கொள்ளும்'' என்று நேபாளத்தின் புதிய பிரதம மந்திரி திரு. பிஸ்டாலே கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நேபாள மந்திரி சபை ராஜினாமாச் செய்ததனையடுத்து புதிய பிரதம மந்திரியாக முன்னாள் பிரதம மந்திரி திரு. பிஸ்டாலேவை மன்னர் பிரேந்திரா நியமித்துள்ளார். (உ)

## இன்று நல்லூர் பூங்காவனம்

யாழ்ப்பாணம், புதன்

நல்லை முருகன் பூங்காவனத் திருவிழா இன்று மாலை 5-30 மணிக்கு நடைபெறும். (அ)

## 'பாதுகாப்பு கிடைக்கும்வரை வேலைக்குத்திரும்புவதில்லை'

### மலேரியாபகுதி ஓவசியர்கள் தீர்மானம்

பண்டத்தரிப்பு, செவ்.

தங்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும்வரை திரும்பவும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குக் கடமையாற்றச்செல்வதில்லை என்று கடந்த சனிக்கிழமையன்று முற்பகல் யாழ். நகரில் கூடிய மலேரியா தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஓவசியர்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

திரு. கே. தங்கவடிவேலு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வெளிமாகாணங்களில் சமீபத்தில் ஏற்பட்ட கலவரங்களில் பாதிக்கப்பட்ட மலேரியா தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இதர முக்கிய தீர்மானங்கள் பின் வருமாறு:-

'பாதிக்கப்பட்ட அரச; அரசு சார்ந்த ஊழியர்கள் சங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மலேரியா தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட ஊழியர் ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்து அச்சங்கம்மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளிலும் பங்குபற்றவேண்டும்.

தற்போது வெளிமாகாணங்களில் (சிங்களப்பகுதிகளில்) கடமையாற்றும் மலேரியா தடுப்புப் பிரிவைச்சேர்ந்த சகல ஊழியர்களும் அவர்களின் சொந்தப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவேண்டும்.

'வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

'குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தகுந்த தண்டனைவழங்கப்படவேண்டும்:'

காஞ்சி அம்பாள் ஆலயத்தில்

## இந்திய ஜனாதிபதிக்காக விசேட பூஜை

சென்னை, செப். 13

பாரத ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி பூரண சுகம் பெறவேண்டி காஞ்சிபுரம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயத்தில் விசேட பூஜை நடத்தப்பட்டது.

தமது நுரையீரலில்ஏற்பட்ட கோளாறுக்காக தற்போது நியுயோர்க் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் திரு. சஞ்சீவரெட்டிக்கு விசேட பூஜையின்பின் பிரசாதம் விமான மூலம் அனுப்பப்பட்டது. (உ)

நீதிமன்றத்தில்

## பூட்டோ ஆஜராகையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

இஸ்லாமாபாத், செப். 13

தற்போது சிறைச்சாலைப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யும்போது பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று பாகிஸ்தான் இராணுவ அரசு பணித்துள்ளது.

நீதிமன்றத்தைஅவமதித்தது தம் எதிரிகளை சிறையிலிட்டது ஆகிய முதலிரு வழக்குகளிலும் சாட்சியம்அளிக்கும் பொருட்டு ஜனாப் பூட்டோ முதலில் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவிருக்கிறார். (உ)

## புதிய பஸ் சேவை

பண்டத்தரிப்பு, செவ்

இளவாலையிலிருந்து நல்லூரிலுள்ள முத்திரைச் சந்தைக்கு புதிய இ. போ. ச. பஸ் சேவையொன்று இம்மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் இ. போ ச. டிப்போவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பஸ் சேவை பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, அராலி ஆகிய இடங்களுக்கு ஊடாக நடாத்தப்பட்டு வருகின்றது.

## இந்திரா ரேபரெலி விஜயம்

புதுடில்லி, செப். 13

திருமதி இந்திராகாந்தி பொதுத் தேர்தல் முடிந்த ஆறுமாதங்களுக்குப் பின்னர் ரேபரெலித் தொகுதிக்கு விமானமூலம் 18-திகதி செல்லவிருக்கின்றார்

அவர் செல்லும் வழியில் லட்சுமணபுரியில் காங்கிரஸ் ஊழியர்களின் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார்.

# ஆயுதப்போட்டி தவிர்ப்பு

## பிரஷ்னேவ் — வால்ட்ஹெய்ம் ஆலோசனை

மாஸ்கோ, செப். 13

தற்போது சோவியத் யூனியனில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஐ. நா. பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட் ஹெய்ம் ஜனாதிபதி பிரஷ்னேவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

மாஸ்கோவில் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தைகளின் போது ஆயுதப் பரிகரணப் போட்டாபோட்டி தவிர்க்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டதாக 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

மத்தியகிழக்குப் பிரச்னை, சைபிரஸ் பிரச்னை, ஆபிரிக்க நிலைமை என்பன குறித்து இரு தலைவர்களும் கருத்துப் பரிமாறிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# மாணவச் செல்வங்களில் மறைந்து வாழும் 'காத்தார்'

யாழ். இந்துக்கல்லூரியின் வளர்ச்சியோடு தனனை இணைத்து மாணவர்கள் நெஞ்சில் நிறைந்த கார்த்திகேசன் மாஸ்டர் காலமாகி விட்டார்! யாழ். இந்துக்கல்லூரியின் வகுப்பறைகளில் ஆசிரியனுக உலவிய நெடிய மெலிந்தஎளியஉருவம், இறுதியில்யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் பீடத்தையும் அலங்கரித்து இன்றுபுகழுடம்பெய்தி விட்டது! மாணவர்களால் 'காத்தார்' எனச் செல்லமாக அழைக்கப்பட்ட அந்தக்காவல் தெய்வம் மறைந்துவிட்டதை நம்பவாமுடிகிறது! கண்ணில்லாத காலன் அவர்தம் மாணவச் செல்வங்களை கண்ணீரில் ஆழ்த்திய வஞ்சகம் நடக்காமல் இல்லை!

கார்த்திகேசன் மாஸ்டரை ஒரு இயக்கம் சார்ந்தவராகத்தான் பேசப்பட்டது எனினும் கல்லூரயில் அவரது எளிமையும்; இனிமையாகப் பேசிப்பழகும் சுபாவமும் பொதுவுன்டமைவாதியாக வாழ்கிருர்என்பதை நிருபித்ததேயொழிய நானறிந்தரை அவர் வாயில் இருந்து அரசியல் சித்தாந்தம் வந்ததை கல்லூரியில் ஒரு நாளும் காணமுடியவில்லை!

அவருடைய இனிய பண்பு எந்த மாணவனையும் அவரைக் கண்டு பயந்தோடவைக்கவில்லை. நண்பனுய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் அவர் கல்லூரியில் உலவியதை அவர்காலத்து மாணவர்கள் மறக்கமுடியாது.

அன்ருெருநாள் கடைசிப் பாடம் நடந்து கொண்டிருந்தது! அதிபராகஅப்போதுபதவியேற்றிருந்தவர் கார்த்திகேசன மாஸ்டரேதான்! அவர் கண் படாமல் கல்லூரி 'கேட்'டைத்தாண்டி வெளியேறிவிட வேண்டும் என்று பகிரதப் பிரயத்தனம் நடக்கிறது. பின்னல் இருந்து 'காத்தாரின்' குரல் சாதாரணமாக அழைக்கின்றது. என்ன நடக்கப் போகிறதோ என்ற பயத்தில் செல்கிருேம். அந்த மனிதர் இந்தக்கடிதத்தைத் தபாலில் சேர்த்துவிடும்' என்று எம்முள் ஒருவரிடம் ஒரு கவரை நீட்டுகிருர். இதற்குப் பின்னல் எப்படிவகுப்பை 'கட்' பண்ண முடியும அந்தமாணவர்களால்? வளர்ந்தமாணவர்களை அவர் அஹிம்சையாலேயே திருத்திவிடும் மாமனிதர் அவர்.

இன்ஞெரு சமயம்; அப்போது எமது வகுப்பு அதிபரின் அறைக்கு அண்மையில் இருந்தது. ஆசிரியர் வராததால் வகுப்பு'களை' கட்டிவிட்டது! இந்த நிலைமை அமைதியாகக்கடமைசெய்யும்ஒருவனை எந்த அளவுக்குச்சினம்கொள்ள வைத்திருக்கும் என்பதை கல்லூரியோடு தொடர்பு வைத்திருப்பவர்களுக்குநன்குபுரியும். ஆனல் 'காத்தார்' நரசிங்க மூர்த்தியாகவரவில்லை! வழமையான துள்ளல் நடையில் வந்து சேர்ந்தார். வகுப்பை ஒரு நோட்டம்விட்டார். வகுப்பில சத்தம் பற்றியோ. குழப்பம் பற்றியோ அவர்கவனித்ததாக காட்டிக் கொள்ளவில்லை! ''என்னய்சே- வகுப்பு ஒரே குப்பையாக இருக்கு; இதற்குள்ளே இருந்து எப்படிப்படிக்கிறீர்கள். எல்லோரும் குப்பையைப் பொறுக்குங்கள்'' என்று சொன்னவர் சும்மா நிற்கவில்லை தானும் குனிந்து பொறுக்கத் தொடங்கிவிட்டார்! என்ன எளிமை! நாம் திகைத்தோம். அந்த நேரப் பிரச்னையைகாத்தார் அமைதிப் புரட்சிமூதப் தீர்த்துவிட்டார்! இப்படியே அவர் பண்புக்கு எடுத்துக்காட்டாகப் பல கதைகளைக் கூறலாம்.

கணிதம் கற்பிக்கும்போதும் சரி, ஆங்கிலம் கற்பிக்கும் போதும் சரி மாணவர்களுக்கு சிரிப்பையூட்டி விளங்கவைக்க கூறிய உவமானங்களை அவரிடம் கல்விபயின்ற மாணவர்கள் இப்போதும்கூறுவார்கள். அவருடைய தத்துவங்களில், பொதிந்துள்ள நகைச்சுவையோடு கூடியகருத்துக்கள் ''காத்தாரை'' அதிபராக மட்டுமே உணரவைத்த விதியை என்னென்றுநோவது?

ஆசிரியத் தொழிலில் ஒய்வு பெற்ற பின்னரும்; எந்தமூலையில் கண்டாலும் தனது மாணவச் செல்வங்களை வலுவில் வந்து கவர்ந்து இழுத்துக்கதைக்கும் பண்பை நினைக்கவே கண்ணீர் வருகின்றது!

யாழ். இந்துக்கல்லூரியும் அதில் உருவாகிய மாணவச் செல்வங்களும் இருக்கும்வரை, கல்லூரிச் சுவர்களிலே முட்டிமோதிய அவர் கருத்துக்கள் மாணவச் செல்வங்களிலே நிலைத்து சிரஞ்சீவித்துவம்பெற்றேயாகவேண்டும். எனவே 'காத்தார்' மறையவில்லை! அவர் உருவாக்கிய மாணவச் செல்வங்களிடையே கலந்து நிற்கிருர் அந்தமாமனிதர்.

—மாணவன்

பேரின்பநாயகம்.

## மத்துகம வன்செயல்கள்: 45 பேருக்கு ரிமாண்ட்

மத்துகம, செவ்.

சமீபத்தில் மத்துகம பகுதியில் நடைபெற்ற வன்செயல்களால் மூடப்பட்டிருந்த தமிழ்க்கடைகள் மீண்டும் படிப்படியாகத் திறக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கையை மத்துகம தலைமைக்காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். எஸ். நவரத்தினராஜா மேற்கொண்டுள்ளார்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக திரு. நவரத்தினராஜா 45 பேரைக் கைது செய்து மத்துகம நீதிபதி திரு பெர்னண்டோ முன்னிலையில் ஆஜர் செய்தார். இவர்களைப் பிணையில்விடுமாறு இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோளை மத்துகம நீதிபதி நிராகரித்து இன்ஸ்பெக்டரின்கோரிக்கையை ஏற்று இவர்களை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். (உ)

## நடனக்கச்சேரி

யாழ்ப்பாணம், புதன்

இந்திய திரைப்பட நடிகையான ஜெயலலிதாவுடன் இணைந்து நடனமாடிய திருமதி வசந்தா டானியலின் நடன நிகழ்ச்சி இன்று புதன்கிழமை வல்வெட்டித்துறையில் நடைபெறவுள்ளது அத்துடன்என். ஆர். சின்னராசா குழு, என். கே.பத்மநாதன்குழு. கே ஆர். புண்ணியமூர்த்தி குழு, எம். இராஜதுரை குழு ஆகியோரது தவில் நாதஸ்வரக் கச்சேரிகளும் வல்வெட்டித்துறையில் இடம்பெறவுள்ளன.

ஊரிக்காடு தொழிலதிபர் வி. சோதா நாராயணசாமியின் புதல்வி சசிதேவியினதும் விஜயசிவாஜியினதும் திருமணவிழாவில் இக்கச்சேரிகள் நடைபெறவுள்ளன.

## யாழ். மாவட்டத்திற்கு புதிய பொலிஸ் அதிபர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபராக திரு ஏர்னஸ்ட் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் 20ம் தேதி பதவி ஏற்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

தற்போது திரு. பெரேரா மாத்தறை பொலிஸ் அதிபராக கடமையாற்றுகிருர். யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ். செனிவரத்தின மாத்தறைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (க)


### கழிவுப் பொருளுக்குக் காசு

உங்கள்வீட்டின் சமையலறையில் பிழிந்த தேங்காய்ப் பூவை நன்கு காயவிட்டு உலர்த்தித் தந்தால் நாங்கள் இறுத்தல் ஐந்துசதமாக விலை கொடுத்துவாங்குவோம்.

மல்ரி ஒயில் இன்டஸ்ரீஸ் லிமிடெட்

இணுவில்

மல்ரி ஷொப் No. 23, மத்தியசந்தை சுண்ணுகம்.

அண்ணு கோப்பிக்கடை No.4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.




## 14–9–77 புதன்

காலை 6-00 மங்களஇசை 6-05 சைவநற்சிந்தனை — இராஜேஸ்வரி பரமேஸ்வரன், 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-15 பாமாலை, 6-30 செய்திகள், 6-40 அறிவிப்புகள், 6-50 துதிப்பாடல், 7-00 இசைக்கோவை, 7-30 உலகச் செய்திகள், 7-35 பாட்டு — கிருஷ்ணலீலாதேவி செல்வராசா, 8-00 புல்லாங்குழல், வீணை — நிலைய வித்துவான்கள், 8-30 மாதர் மஜ்லிஸ்.

மாலை 6-00 செய்திகள், 6-10 அறிவிப்புக்கள், 6-20 பஜனைப்பாடல்கள், 6-30 கத்தோலிக்க சிறுவர்நிகழ்ச்சி — கரவையூர் செல்வம், 6 45 நாடகம் — ''காலம் மாறுகிறது'' — கே. வி. இராமச்சந்திரன்.

7-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 7-02 திருக்குர்ஆன் பொழிப்புரை, 7-05 இஸ்லாமிய கீதம், 7-30 நூறுல் இஸ்லாம், 7-55 வரலாற்றில் ஓர் ஏடும் குறிப்பும் ஸலவாத்தும், 8-05 வாழ்வும் வளமும், 8-30 உலகச்செய்திகள், 8-35 புதிரும் பதிலும் — எஸ். திருநாவுக்கரசு, 9-00 செய்திகள், 9-10 செய்தியின் பின்னணியில், 9-15 அறிவிப்புகள், 9-30 நாகசுரம் — எஸ். சிதம்பரநாதன், 10-30 நேயர்விருப்பம். (கெ-அ)

## இலங்கைக்கு ஜப்பான் 40 லட்சம் டாலர் கடனுதவி

கொழும்பு, செவ்வாய்

இலங்கைக்கு ஜப்பான் 40 லட்சம் அமெரிக்க டாலர்களை கடனுதவியாக வழங்கவுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று கொழும்பில் கைச்சாத்தானது.

இப்பணம் பேராதனை வளாக போதன வைத்திய நிலையத்திற்குச் செலவிடப்படும்.

திட்டமிடல் அமைச்சின் காரியதரிசி திரு எஸ். குணசேகராவும் ஜப்பானிய அரசின் சார்பில் இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதர் திரு. ஹுஹியும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். (உ)

## திருமலையில் உயர்மட்ட சி. ஐ. டி. கோஷ்டி

திருகோணமலை, செவ்.

சமீபத்தில் திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளும் பொருட்டு உயர்மட்ட சி. ஐ. டி. கோஷ்டி ஒன்றுதிருகோணமலையில் தங்கியுள்ளது.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் நிலைமை சுமுக நிலைக்கு வந்துவிட்டதாக அரசாங்க அதிபர் திரு. எரிக் டி சில்வா தெரிவித்துள்ளார்.

# சரித்திரஉரிமையை கேட்கிருேம்!

— அந்தனிசில்

பொத்துவில், செவ்வாய்

இலங்கைத் தீவை சுரண்டவந்த அந்நியர்கள் இத்தீவை இரண்டு நாடுகளாகவே கண்டார்கள். இரண்டு நாடுகளாகவே ஆண்டார்கள். வெவ்வேருகவே ஆண்டார்கள். இறுதியில் வந்த பிரிட்டிஷ் வெள்ளையர்கள் இரண்டு நாடுகளையும் நிர்வாகச்சுலபத்திற்காக ஒன்ருக்கிஞர்கள். பின்னர் எமது தாயகத்தை எம்மிடம் திருப்பித்தராமல் எல்லார்க்கும் ஏதோ சுதந்திரத்தை மட்டும் தந்திருப்பதாகக் கூறிச் சென்ருர்கள். அன்றிலிருந்து தமிழனின் பிரதேசம் குறுக ஆரம்பித்தது. மொழியுரிமை கருக ஆரம்பித்தது. வேலைவாய்ப்பு குறைய ஆரம்பித்தது. அடிப்படை ஜீவாதார உரிமைகளையும் இழக்கவேண்டி ஏற்பட்டது. இந்த நிலையில்தான் மறுக்கப்பட்ட எம் உரிமைகளைக் கேட்டோம். குறைந்த பட்ச கோரிக்கைகளாகவும் கேட்டோம். ஆனல் எதுவும் கிடைக்காது மாறி மாறிவந்த ஆட்சியாளர்களால் மாறிமாறி ஏமாற்றப்பட்டோம். இதன் காரணமாகவே இன்று சரித்திர உரிமையைக் கேட்கிருேம். இது தவறு?''

இவ்வாறு பொத்துவில் பிள்ளையார் கோவிலுக்கருகாமையில் திரு. மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் உரையாற்றிய தீப்பொறி ஆசிரியர் திரு. அந்தனிசில் கூறிஞர். மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது.

''பல நாடுகளில் பல இனங்கள் தத்தம் தாய்மொழியில் ஆட்சி புரிகின்றன. சோவியத் நாட்டில் தாகிஸ்தான், கஜாக்ஸ்தான், உஸ்பெக்ஸ்தான், உக்ரேன், பைலோரஷ்யா போன்ற (சோவியத் துக்கள்) பிரதேசங்கள் அந்தந்த மக்களின் மொழிகளிலேயே ஆட்சிபுரியப்படுகின்றன.

''இந்தியாவிலும் பஞ்சாபி, சிந்து, குஜராத்தி, மராத்தி, வங்க, உத்கல, பீகார், ஒரிஸ்ஸா, கேரளா, ஆந்திரா, கன்னட, தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் அந்தந்தமொழிகளிலேயே ஆட்சிசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாநிலத்துக்கும் வரையறுக்கப்பட்ட எல்லைகளும் உண்டு. இதைப் போன்றதாகவே மாவட்ட சபையைக் கேட்டோம். அதிலும் ஏமாற்றப்பட்டோம். இப்படியேநாம் ஏமாற ஏமாற நமது பிரதேசம் குறுகிக்குறுகி பெரும்பான்மை இனத்துக்கு கைமாறுவதுதான் நாம் கண்ட மிச்சம். இப்படியே தமிழனின் நிலம் பறிபோய் வந்தால் வெருங்காலத்தில், தமிழ்பேசும் இனம் எங்கு தான் போய்வாழ்வது? எனவே தான் எமது பாரம்பரிய பிரதேசத்தை மேலும் பிச்சுப் பிடுங்காமல் எம்மிடம் தந்து விடும்படி கேட்கிருேம்'' என்ருர் அவர்.

டாக்டர் உதுமலெப்பை உட்பட மற்றும் பலர் பேசினர்.

## பிரேரணை கொண்டுவரப்படவில்லை

யாழ்ப்பாணம், புதன்

கடல்கடந்த தந்திச்சேவை ஊழியர்கள் தமது எதிர்காலம் பற்றி ஆராய கடந்த சனியன்று கூடிய கூட்டத்தில் ''பாதுகாப்புக்கென கைத்துப்பாக்கி வைத்திருக்க அரசு அனுமதிக்கவேண்டும்'' எனத் தீர்மானம் எதுவும் கொண்டுவரப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அறிவித்துள்ளனர். (கி)

## ''சந்தர்ப்பவாதிகளின் சூழ்ச்சி''

கொழும்பு, செவ்.

''சமீபத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்கள் சிங்கள-தமிழ் மக்களுக்குஇடையிலான இனக்கலவரம் அல்ல. சிலசந்தர்ப்பவாதிகள் தான் சூழ்ச்சிசெய்து இக்கலவரத்தைத் தோற்றுவித்தனர்'' என்று அகில இலங்கை பௌத்த சங்கத் தலைவர் திரு. செனரத் குணவர்த்தன வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிருர்.

'மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டியது பௌத்த தர்ம கோட்பாடாகும்' என்றும் அவர் கூறியுள்ளார். (உ)

## தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

நாட்டில் இடம்பெற்ற இனவாத சம்பவங்களிஞல் பாதிக்கப்பட்டு யாழ். மாவட்டத்திற்குத் திரும்பியுள்ள பிராந்திய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இம்மாதம் 30-ம் தேதிவரை மீண்டும் சேவையாற்றிய இடங்களுக்குச்செல்வதில்லையெனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணம் நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் தம் நிலைகுறித்து மேலும் ஆராய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது. (கெ-உ)

# துன்புற்ற தமிழர் நல்லூரானிடம் முறையீடு

சுமார் அறுபது வருடங்களுக்கு மேலாக ஆண்டுதோறும் நல்லூரிக் கந்தன் தேர்த்திருவிழாவுக்குச் சென்று தரிசித்திருக்கிறேன். ஆனல் இந்த வருடம் புதிய வசந்த மண்டபத்தில் ஆறுமுகனுக்கு நடந்த பூசையையும், தேரால் இறங்கி வந்தபின் அப்பெருமானுக்கு நடந்த ஷண்முக அர்ச்சனையும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன. கலாபமயில் பின்னணியில் இருக்க முன்னல் தங்க ஜெகசோதியாய் விற்றிருந்த ஆறுமுகனுக்கும் தேவிமாருக்கும் ஆறு குருக்கள்மாரால் நடாத்தப்பெற்ற தூபதீப அர்ச்சனை மரியாதைகள் பல.

— செ. இரத்தினசபாபதி —

அண்மையில் தென்னிலங்கையிலும் மற்று இடங்களிலும் நடந்த வன்செயல்களால் பாதிக்கப்பட்டு வீடுகளையும், உடைமைகளையும் இழந்து வடக்கேவந்து குவிந்தவர்களின் பெருக்கத்தால், நல்லூரில் இம்முறை பெருங்கூட்டம். அடி, கத்திக்குத்து, வீடெரிப்பு, கற்பழிப்பு, கொள்ளை முதலிய அசுர அட்டூழியங்களினல் பாதிக்கப்பட்ட தமிழர், தமிழ் தெய்வமாகிய முருகனிடம் வந்து தஞ்சம் புகுந்து முறையிட்டது முறையே. நோய் மற்றும் துன்பங்கள்வரும்பொழுது தான் தெய்வத்தை நினைப்பது மனித சுபாவம்.

கூர் மாரியும் குன்றும் துளைத்து கொடிய அரக்கனுகிய சூரபத்மனை நிர்க்கதியாக்கிய வேலனுக்கு வெறும் இனவெறிக்காடையர்களை அடக்குவது கிரமமல்ல.' அரசன் அன்று அறுப்பான் தெய்வம் நின்று அறுக்கும்என்ற முதுமொழிஒருபோதும் பொய்யாகாது.

எமது நாட்டில் நடந்த வன்செயல்கள் பற்றி சென்ற செப்டம்பர் மாதம் 5ம் திகதி வெளியான 'நியூஸ்வீக்' என்ற சர்வதேச ஆங்கிலச் சஞ்சிகையில், ஸ்ரீலங்காவில் 'மனிதனின் மிருகத் தன்மையைக் கண்ணூரக் கண்டேன்' என்று ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது. தர்மதுவீபம் என வர்ணிக்கப்படும் எமது நாட்டில் இப்படி மனிதர்கள் மிருகமாகிவிட்டது யாருக்கும் பெருமை அளிக்கமாட்டாது.

## கல்வித்துறையில் புரட்சிகர மாற்றங்கள்: அமைச்சர் அறிவிப்பு

கண்டி, செவ்

"கல்வி முறையில் புரட்சிகரமான மாற்றங்களை எமது அரசாங்கம்செய்யவிருக்கிறது" என்று கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன கூறினர்.

கண்டி சென் அந்தனிஸ் கல்லூரி கையளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டுபேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னர்.

கல்வி அபிவிருத்திக்கு கத்தோலிக்கத் திருச்சபை ஆற்றிய சேவையையும் அமைச்சர் பாராட்டினர்

கண்டி அதிமேற்றிராணியார் வண.பிதா போல் பெரேராவும் உரையாற்றினர். (உ)

## உடைமைகளை இழந்தவரா நீங்கள்?

யாழ்ப்பாணம், புதன்

நாட்டில் இடம்பெற்ற இனவாதசம்பவங்களில் தமது உடைமைகளை இழந்திருந்தால் அதுபற்றிய விபரங்களை ஒருவார காலத்துக்குள் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நாட்டின் பலபாகங்களில் பந்தோபஸ்து படையினர் தம் தீவிர காவல் முயற்சியினல், கொள்ளையடிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான பொருட்களை மீட்டுள்ளனர். கலவரங்களினல் பாதிக்கப்பட்டவர்கள் தாம் இருந்த இடங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று தங்கள் உடைமைகள் பற்றிய சகல விபரங்களையும் பொலிசாருக்குத் தெரிவித்தால் கைப்பற்றப்பட்ட பொருட்களை இலகுவில் அடையாளம் காட்டி உரியவர் பெற்றுக் கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டது.

கொள்ளையடிக்கப்பட்ட சகலபொருட்களையும், இன்னும் ஓரிரு வாரத்தில் பொலிசார் கொள்ளையர்களிடமிருந்து மீட்டுவிடமுடியுமென்று நம்புவதால், பாதிக்கப்பட்டவர்கள், உடனடியாக தகவல் அளிக்கும்படி பொதுமக்களை பொலிசார் வேண்டியுள்ளனர். (கெ-உ)

## இளம் விவசாயிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், புதன்

வன்செயல்களால் பாதிக்கப்பட்டு தொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தங்கியிருந்த அகதிகளுக்கு சுன்னகம் மயிலணி வடக்கு இளம் விவசாயிகள் கழகத்தினர் தலைவர் திரு ஆ சொர்ணலிங்கம், திட்ட முன்னணிச்செயலாளர்திரு ஐ முருகையா தலைமையில் 200 ரூபாவும் உணவுப்பொருட்களும் கொடுத்துதவினர்.

## பெருமாள் கோவில் உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் கோவில் மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. காலை 9-15 மணிக்குக் கொடியேற்றக் கிரியைகள் ஆரம்பமாகும். 10 மணிக்கு வசந்த மண்டப தீபாராதனை, 11 மணிக்குக் கொடியேற்றம்; 12 மணிக்கு உற்சவம்.

22ம் திகதி தேர்த்திருவிழாவும், 23ம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 24ம் திகதி திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

தினமும் பகல் திருவிழா பகல் 12 மணிக்கும் இரவுத் திருவிழா இரவு 8 மணிக்கும் நடைபெறும. (அ)

## பூட்டோ பிணையில் விடுதலை

இஸ்லாமாபாத், செப். 13

சிறைச்சாலை றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த முன்னள் பாகிஸ்தான் பிரதமர் ஜனுப் சுல்பிகார் அலிபூட்டோவை பிணையில்செல்ல லாகூர் நீதிமன்றம் அனுமதித்தது.

(முன்னர் வந்த செய்தி 3ம் பக்கத்தில்) (உ)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், புதன்

நாவாந்துறை சென் மேரிஸ் சன சமூகநிலைய'ஏ' 'பி'பிரிவு கோஷ்டிகளிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 'ஏ' பிரிவு 4—2 கோல்களால் வெற்றிபெற்றது.

## அகதிகள் நிலைபற்றி ஜி ஜி.காங்கிரஸ் ஆராயும்

யாழ்ப்பாணம், புதன்

வடக்கேவந்துள்ள அரசாங்க ஊழியர் நிலைபற்றியும் அகதிகள் நிலைபற்றியும் ஆராய்வதற்குத் தமிழ்ஈழ ஜி.ஜி.காங்கிரஸ் உபகுழு ஒன்றைத் தெரிவுசெய்துள்ளது.

கோண்டாவிலிலுள்ள ஜி ஜி. காங்கிரஸ் தலைமைக்காரியாலயத்தில், உபதலைவர் திரு.எஸ். எஸ்.சுந்தரம் தலைமையில் நடந்த கமிட்டிக் கூட்டத்திலேயே இந்த உபகுழு- தெரியப்பட்டது.

இந்த உபகுழுவில் திருவாளர்கள் ஆர்.என் சிவப்பிரகாசம், வி.குமாரசாமி, எஸ். எஸ். சுந்தரம், க. இராமநாதன், சி முதலியார் ஆகியோர்இடம் பெற்றுள்ளனர்.

இந்த உப-குழு அறிக்கையை ஒருமாத காலத்திற்குள் தலைமைப்பீடத்திற்குச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (க-அ

மட்டக்களப்பு

## இளம் ஆசிரியை மர்ம மரணம்: மூவருக்கு தலா ரூ. 1000 பிணை

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு இளம் ஆசிரியையின் மர்ம மரணம் குறித்து கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த மூன்று சந்தேகநபர்களையும் தலா 1000 ரூபாபிணையில் செல்ல மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு.டபிள்யு ஜி. என். விரரத்ன அனுமதித்துள்ளார்.

இம்மர்ம மரணம் தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள்: கே. தியாகராஜா, அவர் மனைவி மகேந்திரராணி, மகேந்திரராணியின் சகோதரி இந்திராணி தங்கராஜா ஆகியோராவர்.

திருமதி கோசலா விஜயகுமார் என்ற பிரஸ்தாபஇளம் ஆசிரியை கடந்த ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதி மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இரு மணித்தியாலங்களின் பின் மரணமானர்,

விசாரணையின்போது மட்டக்களப்பு பொலிஸார் கே. வீரபாகு ஜோதி ஜீவானந்தம் ரகுபதிசிவம் என்னும்இருவரை சந்தேகத்தின்பேரில் கைது செய்து றிமாண்டில் வைத்தனர். பின்னர் ஆகஸ்ட் 23ல் முன்குறிப்பிட்ட ஏனைய மூவரில் இருவரும் கைதுசெய்யப்பட்டனர். இதற்கு மறுதினம் இந்திராணி என்பவர் கைது செய்யப்பட்டார்.

வீரபாகு ,ஜோதி ஜீவானந்தம் ரகுபதிசிவம் ஆகிய இருவரையும் தொடர்ந்து செப்டெம்பர் மாதம் 16-ம் திகதி வரை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

(உ)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15 p. m. only
EDGAR RICE BURROUH'S
At The Earth's Core
FAMILY ENTERTAINMENT

சாந்தி யாழ். நகர் போன்: 7842
தினசரி 10-30, 2-30, 6-30 காட்சிகள்
முத்துராமன் புஷ்பலதா அசோகன் நாகேஷ்
நல்வரவு
[புதிய பிரதி]

ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30 மாலை 6-30
சிவாஜி - கே. ஆர்.விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)
16-9-77 வெள்ளி முதல்
பெண் தெய்வம்

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30, 5-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ்.நகர்]
தினசரி10-30, 2-30 மாலை6-00
விஜயகுமார் ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ (யாழ்.நகர்) போன்: 7693
தினசரி 10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-00
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ் அறிமுகம் பவானி நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

Regal (Jaffna)
Daily at 10-30 a.m., 3-30 & 6-30 p. m.
One of the foremost Fun Films of the year.
The story of strange carrying— on at a Caravan
KENNETH WILLIAMS — ELKE SOMMER
in
"CARRY ON BEHIND"
(Color)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 8-00, 10-00, பி. ப. 2-00, 5-00 மணி
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
அன்னக்கிளி

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 5-30 போன்: 7180
எஸ் எஸ் ஆர் - விஜயகுமாரி எம். ஆர். ராதா, தங்கவேலு நடித்த
உல்லாசப் பயணம் [புதிய பிரதி]

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 7-00
எம். ஜி. ஆர் - சாவித்திரி
வேட்டைக்காரன்

நாகம்ஸ் (சுன்னகம்)
தினசரி 2 45 6 45
ஜெய்சங்கர் - நிர்மலா
எடுப்பார் கைப்பிள்ளை

# காப்புறுதியும் பாதுகாப்பும்

## என்ஜினியர்கள் கோருகிறார்கள்

யாழ்ப்பாணம், புதன்

மகாவலி அபிவிருத்திச்சபை, மத்திய பொறியியலாளர் ஆலோசனைச்சபை ஆகியவற்றைச் சேர்ந்த வன்செயல்களினால் இடம்பெயர்ந்த பொறியியலாளர்கள் தமக்கு நிவாரணம் கோரியுள்ளதோடு எதிர்கால காப்புறுதித்திட்டமொன்றை உடனடியாக நிறுவும் படியும் மகஜர்மூலம் கோரியுள்ளது. மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் கோரிக்கைகளில் சிலவருமாறு:

''மகாவலி அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த சகல பொறியியலாளர்களும் ஒரு லட்சம் ரூபாவும் உபதொழில்நுட்ப எழுதுநர் சேவைத்தரத்தினருக்கு ரூபா ஐம்பதினாயிரமும் சிற்றூழியர்களுக்கு ரூபா இருபத்தையாயிரமும் காப்புறுதிப் பெறுமதித்தொகைகளாக்கப்பட வேண்டும்.

''நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது போன்று முகாம்களில் தங்குபவர்களின் பாதுகாப்புக்காகத் துவக்கு வசதிகள் வழங்கப்படவேண்டும்

''தங்களது சொந்தப் பாதுகாப்புச் சேவையை உருவாக்குவதற்கான உத்தரவாதம்.

''பணம், விஞ்ஞான உபகரணங்களைக் கையாளும் உத்தியோகத்தர்களுக்குத் தகுதியான ஆயுதங்கள் வழங்கப்படல்வேண்டும்.

### பாதுகாப்புச் சேவையாளர் நியமனம் பற்றி

''பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிக்க முன்னர் அவர்களது நன்னடத்தை பற்றிய தகுந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்

''நிலைமை சீரடையும்வரை மகாவலி அபிவிருத்திசபையின் சகல வாகனங்களும் ஆயுதந்தாங்கிய காவலர்களால் பாதுகாக்கப்பட வேண்டும்

''தம்புத்தேகமநகர நிர்மாண வேலைகளின் பகுதி ii-ம், iii-ம் தொடர்பான படவரைதல் வேலைகளை வவனியாவிலுள்ள மத்திய கந்தோரில் செய்ய வாய்ப்பளிக்க வேண்டும்.

*பிரதமர் தகுந்த நடவடிக்கை எடுத்துக் குற்றவாளிகள் தண்டிக்கப்படும்வரையும் மேலும் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களின் கழகம் சமர்ப்பித்த கோரிக்கைகள் வென்றெடுக்கப்படும் வரை மேற்படி சபையின் பொறியியலாளர்கள் இதர உத்தியோகத்தர்கள் வேலைக்கு திரும்புவதில்லை என்றும் தீர்மானித்துள்ளனர்.

இம்மகஜரின் பிரதிகள் நீர்ப்பாசன அமைச்சருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மகாவலி அபிவிருத்திச் சபைத் தலைவர், பாதிக்கப்பட்ட பகுதிகளின் சகல பாராளுமன்ற உறுப்பினர்கள், மகாவலி அபிவிருத்திச்சபைப் பொறியியலாளர்கள் சங்கம், பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களின் பிரதான கழகம் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளன. [அ]

## மாம்பழ உற்பத்தி அதிகரிக்க இவர் கூறும்வழி

யாழ்ப்பாணம், புதன்

ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள மாமரச் சொந்தகாரர்கள் கிருமிநாசினியைப் பாவிக்காததன் காரணத்தினால் அதிக பயனைப் பெற முடியாமல் இருக்கின்றனர். மாமரங்கள் பூக்கத் தொடங்கும் போது அல்லது பூக்கள் முதிர்ச்சியடையும் நிலையினில் கிருமிநாசினிகளை விசிறுவதன் மூலம் அதிககாய்களை உண்டாக்க இப்பகுதி விவசாய விரிவாக்க உத்தியோகஸ்தர் திரு. க. சிவக்கொழுந்து சகல மாமரச் சொந்தக்காரர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த வருடங்களில் மாதிரி முறையாக கிருமிநாசினியை மரங்களுக்கு வீசிக் காண்பித்தார். இவ்வருடம் அதைப்போன்று செயல்முறையினை மாமரச்சொந்தக்காரர்கள் பயன்படுத்தா விட்டால் மாம்பழ உற்பத்தி குறையலாமெனவும் பின்வரும் கிருமிநாசினிகளை உடனடியாக விசிறுமாறும் அவர் கோரியுள்ளார்.

கிருமிநாசினி ''செவகரனற் என்'' அல்லது விரிக்கன்ற் என்ற கிரிமிநாசியை நீருடன் கலந்து விசிறவேண்டும். ஈரம் காயமுன் பி. எச். சி. தூம பவுடரை மஸ்லின் துணியில் பொட்டலமாக கட்டி வீசுவதால் பூச்சிகள் தாக்காது காப்பாற்ற முடியும்.

கிருமிநாசினிகளை விசிறும்போது இயந்திரமருந்து தெளிகருவி மூலமாகவோ கைதெளிகருவி மூலமாகவோ விசிறலாம். ஆனால் மருந்து செல்துவாரத்தை ஒடுக்கச் செய்து காற்று வீசும் வேகத்தை அதிகரித்து விசிற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கெ-உ)

## முகமூடிக் கொள்ளையன்—

1-ம் பக்கத் தொடர்ச்சி

வெட்டப்பட்டிருந்தது.

இச்சம்பவம் சாவகச்சேரி நகரத்திலிருந்து இரண்டுமைலுக்கு அப்பால் மீசாலைப் பகுதி அல்லாரை தெற்கில் நடந்துள்ளது.

சம்பவதினம் அல்லாரை தெற்கில் உள்ள கல்வீடு ஒன்றில் வசிக்கும் சின்னத்தம்பி சின்னையா என்பவர் பொத்துவில் இடைத் தேர்தல் முடிவுகளை அறியும் பொருட்டு வானொலியை இயக்கிவிட்டு வீட்டில் 4 குழந்தைகளுடன் படுத்திருந்தாரென்றும், இரவு 11 மணிக்கு பிள்ளைகள் உறங்கிவிடவே வானொலியை நிறுத்திவிட்டு அவரும் உறங்கிவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

### நள்ளிரவு நால்வர்...

நள்ளிரவு 12 மணிக்கு காக்கி உடையுடன் முகமூடி அணிந்த நால்வர் வீட்டிற்குள் புகுந்து சின்னையாவிடம் துப்பாக்கி முனையில் திறப்பை கேட்டதாகவும், அவர் அதற்கு மறுத்து அவர்களுடன் போராடியதாகவும் கூறப்படுகிறது.

### விளக்கு அணைந்தது

நீண்டநேரம் இவர்கள் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்த சமயம் விளக்கு அணைந்துவிட்டதாகவும், அச்சமயம் தகப்பனின் பரிதாப நிலையைக் கண்ட 13 வயதுச் சிறுவன் குழைச்சத்தகத்தினால் முகமூடி கொள்ளையர்களை பயங்கரமாக எதிர்த்து போராடினாரென்றும் கூறப்படுகிறது.

### துடிதுடித்து விழுந்தார்

இப்பயங்கர போராட்டத்தின்போது முகமூடி கொள்ளையர்களில் ஒரு நபர் பலமாகத் தாக்கப்பட்டு துடிதுடித்து அவ்விடத்திலேயே சுருண்டு விழுந்தாரென்றும் கூறப்படுகிறது.

### இரத்தம் வழிந்தோட

காயமடைந்த மற்றொரு முகமூடிக் கொள்ளையர் இரத்தம் வழிந்தோடிய நிலையில் மற்றும்இரு முகமூடிக் கொள்ளையரின் உதவியுடன் தப்பி ஓடிவிட்டதாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

### உள்ளூர் துப்பாக்கி

கொலையுண்ட முகமூடிக் கொள்ளையனுக்கருகில் உள்ளூரில் தயாரிக்கப்பட்டதாக கருதப்படும் கைத்துப்பாக்கி ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

### கத்தி, கிறிஸ் பொல்லுடன்

முகமூடிக் கொள்ளையர்கள் துப்பாக்கியுடன், கத்தி, கிறிஸ் பொல்லு போன்ற ஆயுதங்களையும் கொண்டுவந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

தந்தையின் உயிரைப் பாதுகாக்கவே அந்தச் சிறுவன் இச்செயலைச் செய்துள்ளான் என்று பொலிசார் கருதியதையடுத்துச் சிறுவன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளான்.

யாழ்ப்பாண மாவட்ட இணைப்பதிகாரி திரு. ருத்ரா இராஜசிங்கம். பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் ஸ்தலத்தில் விசாரணை நடத்தினர்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டார். விசாரணைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (க-இ)

## அமைச்சரைச் சந்திக்க ஆசிரியர்கள் மீண்டும் முயற்சி

யாழ்ப்பாணம், புதன்

இடம் பெயர்க்கப்பட்ட தமிழர் ஆசிரியர்கள் வன்முறைச் செயல்களால் ஏற்பட்ட பயங்கரமான சூழ்நிலைகள் முற்றாகச் சீரடைந்துவிட்டதெனத் திருப்திப்படும் வரை பாடசாலைகளுக்குச் செல்லும் திகதியைக் காலவரையின்றிப் பின்போடவேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தும்பொருட்டு கல்வியமைச்சரைப் பேட்டி காண முயன்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தூதுக் குழு. கல்வியமைச்சர் கொழும்பில் இல்லாமையால் சந்திக்கமுடியவில்லை என்றும் அமைச்சர் கொழும்பு திரும்பியதும் இத்தூதுக் குழு அவரைப் பேட்டி காணும் என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிருவாகச் செயலாளர் திரு. அ. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆராய்ந்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து தீர்வுகாண முயலுமாறு யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி திரு ருத்ரா இராஜசிங்கத்தை மகஜர் மூலம் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## தமிழில் இல்லை

யாழ்ப்பாணம், புதன்

அரச வர்த்தமானி சிங்களத்திலும் ஆங்கிலத்திலும்மட்டும் சமீப காலமாக வெளிவருவதால் தமிழ் பேசும் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். (கி-அ)

## வடக்கில் 13 முகாம்களில் 3,183 அகதிகள் தஞ்சம்

யாழ்ப்பாணம், புதன்

அண்மையில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களினால் நிலைபெயர்க்கப்பட்டு, வடபகுதிக்கு திரும்பியுள்ள 20,000க்கும் அதிகமான அகதிகளில், தமது சொந்த உறவினர்களின் வீடுகளுக்கு சென்றவர்கள், புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் போக, 13முகாம்களில் 3183 பேர் அகதிகளாக நேற்றுவரை இருக்கின்றனர்.

இராமநாதபுரத்தில் 181 பேரும், தர்மபுரத்தில் 272 பேரும், கனகபுரத்தில் 197 பேரும், ஜயந்திபுரத்தில் 390 பேரும், கிளிநொச்சியில் 467 பேரும் பளையில் 237 பேரும். சாவச்சேரியில் 162 பேரும். ஸ்கந்தபுரத்தில் 300 பேரும். கொழும்புத்துறையில் 219 பேரும், சென்பற்றிக்ஸ்கல்லூரியில் 208 பேரும், பண்ணையில் 150 பேரும், அச்சுவேலியில் 150 பேரும், யாழ். இந்துக்கல்லூரியில் 70 பேரும் உள்ளனர்.

கிளிநொச்சிப்பகுதி முகாம்களில் உள்ள அகதிகளுக்கு வயிற்றோட்ட நோய் அதிகமாகப் பரவியுள்ளதால் உடனடியாக மருந்துவகைகளை தனியார்துறை லொறிமூலம் கோப்பாய் தேசியப்பேரவை உறுப்பினர் திரு.எஸ் கதிரவேலுப்பிள்ளையும், யாழ்ப்பாண தேசியப்பேரவை உறுப்பினர் திரு. வெ.யோகேஸ்வரனும் அனுப்பிவைத்துள்ளனர். (இக)

## பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

நாட்டில் ஏற்பட்ட இனவாத சம்பவங்களினால் பாதிப்புற்று வடபகுதி திரும்பியுள்ள தமிழ் ஊழியர்களின் நிலை குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக, பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகம் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று காலை 9-30 மணிக்கு நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்களின் கூட்டம் நாவலர் வீதியிலுள்ள கமகப் பணிமனையிலும், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களின் கூட்டம் காலை 10-00 மணிக்கு திருநெல்வேலி விவசாயப்பண்ணையிலும், கடல் கடந்த தந்திச்சேவை உத்தியோகத்தர்களின் கூட்டம் காலை 10-00 மணிக்கு வின்சர் திரையரங்கு மேல்மாடியிலும், உள்ளூராட்சி உத்தியோகத்தர்களின் கூட்டம் காலை 10-00 மணிக்கு யாழ். மாநகரசபை மண்டபத்திலும், அஞ்சல் எழுதுவினைஞர், பொறியியல் ஊழியர்களின் கூட்டம் காலை 10-00 மணிக்கு பிரதேச அஞ்சல் பொறியியலாளர் இளைப்பாற்று மண்டபத்திலும் நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை பொறியியலாளர்களின் கூட்டம் ஹோட்டல் பரடைஸில் காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பொறியியல் நிறுவன உத்தியோகத்தர்களின் கூட்டம் காலை 9-30 மணிக்கு பிச்ரோட்டில் உள்ள வடபகுதி பொறியியல் பிராந்திய பணிமனையிலும், சகல தொழிற்சங்க உத்தியோகத்தர்களின் கூட்டம் காலை 10-00 மணிக்கு கமகப் பணிமனையிலும், கணக்காளர்கள் பரிபாலன உத்தியோகத்தர்களின் கூட்டம் வீடமைப்பு திணைக்கள காரியாலயத்துக்கு அருகாமையில் காலை 10-00 மணிக்கும் நடைபெறும். (கெ-இ)

## நாளை கருத்தரங்கு

[வேலணை]

மிளகாய், வெங்காயம் ஆகிய பயிர்களைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்தியும் நிலத்தை வளப்படுத்தியும் இவற்றின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் தீவுப்பகுதி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கும் கருத்தரங்கு ஒன்று நாளை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

யாழ். மாவட்ட விவசாய அதிபர் திரு. நா. சிவமுத்துலிங்கம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும். (இ)

## வன்செயல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டியது அவசியமென்றும் இதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பும் அவசியமென்றும் திரு. சுந்தரலிங்கம் சொன்னார்.

இந்த வகையில் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் கீழ் உடனடியாகத் தொண்டர் படைகளை அமைத்து அவற்றின் ஒத்துழைப்பின் மூலம் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாமென்றும் திரு. சுந்தரலிங்கம் கருதுகின்றார்.

கொள்ளையடிப்பதையே நோக்கமாகக்கொண்ட சிலர் வேறுபெயர்களில் இந்த வன்முறைச் செயல்களில் ஈடுபடுகிறார்களென்றும் இதைத் தடுத்து நிறுத்துவதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பளிக்காவிட்டால் எவருமே பாதுகாப்பாக வாழமுடியாத நிலைஏற்பட்டுவிடுமென்றும் அவர் அச்சம் தெரிவித்தார்.

வடபகுதிப் பொலிஸ் அதிபராக யாழ்ப்பாணத்தில் ஆறு வருடங்கள் கடமையாற்றிய திரு. சுந்தரலிங்கம் இப்பகுதியில் அமைதியையும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் பெயர் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொள்ளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியின்போது கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் நேற்று முன்தினமிரவு கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

விசாரணையின் பொருட்டு இவர்கள் விமானமூலம் அழைத்துச் செல்லப்பட்டனர். [இ]

## அறிவித்தல்

### அரசாங்க எழுது சேவையாளர் காங்கிரஸ் (1977ம் ஆண்டுப் பொதுக் கூட்டம்)

எதிர்வரும் 16-9-77ல் நடக்க இருந்த மேற்படி பொதுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களுக்காக 11-11-77க்குப் பின்போடப்பட்டிருக்கிறது என்பதைத் தயவுசெய்து உறுப்பினர்கள் கவனிக்கவும்.

90/23, அவென்டேல் வீதி, மருதானை.

ஜீ' பரஞ்சோதி, கௌரவ பொதுச் செயலாளர்.

7089

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka